தமிழ்நாட்டினுடைய விவசாய மக்களைப் பாதிக்கின்ற எந்தத் திட்டத்திற்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அனுமதி அளிக்காது. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள். (குறுக்கீடு) திரு. முஹம்மது அபூபக்கர், உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதியில்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் திடீரென்று அப்படி ஒன்றும் கேட்க முடியாது. (குறுக்கீடு) அனுமதியில்லை. நீங்கள் என்ன கேட்கப் போகிறீர்கள் என்பதை என்னிடம் சொன்னால்தான், நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் பதில் சொல்ல, தயார் செய்ய முடியும். (குறுக்கீடு) அது சரி, உட்காருங்கள், பரவாயில்லை. (குறுக்கீடு) சரி, உட்காருங்கள்.*

(உ) தமிழகத்தில் உயர் மின் கோபுரங்களுக்குப் பதிலாக புதைவடங்கள் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள்.*

திரு. கே.எஸ். மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கழகத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். உயர்மின் கோபுரத்திற்குப் பதிலாக புதைவடம் அமைக்கக் கோரி அரசின் கவனத்தை ஈர்க்கவிரும்புகிறேன். தமிழகத்தில், கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட 13 மாவட்டங்களில் 12 உயர் மின்கோபுரங்கள் அமைக்கும் திட்டத்தை தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகமும்,* Power Grid *நிறுவனமும் செயல்படுத்தி வருகின்றன. இதனால், பாதிக்கப்படும் விவசாயிகள் கடந்த மூன்று ஆண்டுகளாக உயர்மின் கோபுரங்களுக்குப் பதிலாக சாலையோரமாக புதைவடமாக அமைக்கக் கோரி அறவழியில் கடுமையாக போராடி வருகின்றனர். இதுபோன்று உயர் மின்னழுத்த மின்சாரம் செல்கின்றபோது, மின்னலைகளால் புற்றுநோய் போன்ற நோய்கள் உருவாகும் என்று* World Cancer Report–*ல் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதனால், மனிதர்கள், விலங்குகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படுகிறது. அதேபோன்று, கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் எங்கள் கழகத்தின் தலைவர், மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித்*